**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**இலங்கைப் பிரதம மந்திரியும் இந்திய உயர் ஸ்தானிகரும் இணைந்து இலங்கையின் முதலாவது வாகனம் பொருத்தும் தொழிற்சாலையை மத்துகமவில் அங்குரார்ப்பணம் செய்கின்றனர்**

இலங்கையின் பிரதம மந்திரி, கௌரவ ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர், இன்று, மத்துகமவில் மஹேந்திரா ஐடியல் லங்கா (தனியார்) நிறுவனத்தினால் கட்டப்பட்ட இலங்கையின் முதலாவது வாகனம் பொருத்தும் தொழிற்சாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர் . மஹேந்திரா ஐடியல் லங்கா தனியார் நிறுவனம் என்பது இந்தியாவின் மஹேந்திரா & மஹேந்திரா மற்றும் இலங்கையின் ஐடியல் மோட்டர்ஸ் என்பவற்றுக்கிடையிலான ஒரு கூட்டு நிறுவனமாகும்.

பிரதம மந்திரியின் ஆலோசகர் திரு. சரித்த ரத்வத்தைÉ முதலீட்டு சபையின் திரு மங்கள யாப்பாÉ இலங்கை அரசாங்கத்திலிருந்தான சிரேஷ்ட அதிகாரிகள்É ஐடியல் குறூப் நிறுவனங்களின், தலைவர் திரு.நளின் வெல்கம É மற்றும் மஹேந்திரா & மஹேந்திரா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர், கலாநிதி. பவண் கோன்கா மற்றும் ஏனைய பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கௌரவ பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் இருக்கின்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இந்திய மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கிடையில் கைத்தொழில் கூட்டிணைதல்களுக்கு கணிசமான வாய்ப்புகள் இருக்கின்றதை குறிப்பிட்டார். இலங்கை மீது தொடர்ச்சியான நம்பிக்கை வைத்து ஆதரவளிப்பதற்கு இந்திய தலைமைத் துவத்திற்கும் அவர் தன் நன்றியைத் தெரிவித்தார்.

உயர் ஸ்தானிகர் தனது உரையில், இந்திய - இலங்கை நிறுவனங்களால் களுத்துறையில் நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்சாலை இந்தியா மற்றும் இலங்கையால் கூட்டாக எதனை அடைவதற்கு முடியும் என்பதின் ஒரு பிரதிபலிப்பாக உள்ளது எனக் குறிப்பிட்டார். இத்தொழிற்சாலை, இந்தியாவின் 'இந்தியாவில் தயாரியுங்கள்' (Make in India) முன்னெடுப்பிற்கு சமாந்தரமாக 'இலங்கையில் தயாரியுங்கள்' (Make in Sri Lanka) என்பதை முன்னேற்றுவதைக் குறிக்கிறது என மேலும் தெரிவித்தார் . நெருக்கடியான தருணங்களின் போது இலங்கையுடன்

நிற்பதற்கு இந்திய நிறுவனங்களின் பற்றுறுதியையும் இது எடுத்துக்காட்டுகிறது என உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

தொழிற்சாலை, உள்நாட்டு சந்தைத் தேவைகளையே முதன்மையாக பூர்த்தி செய்யும் . இது உள்ளூர்த் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் É முதலீடுகள் அதே போன்று தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மற்றும் திறன் தொகுதிகளை உள்ளே கொண்டு வரும் . இலங்கைப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அது பங்களிக்கும்.

கொழும்பு
ஆகஸ்ட் 17, 2019